தினமணி

# செம்மை நெல் சாகுபடியில் புதிய வேளாண் முயற்சிகள்

நமது நிருபர்

First Published : 17 Mar 2011 12:22:32 AM IST

சிதம்பரம்: தமிழக விவசாயிகளிடையே செம்மை நெல் சாகுபடி முறை மிகுந்த வரவேற்பை பெற்று வருகிறது.

குறைந்தளவு வேளாண் இடுபொருள்களை கொண்டு அதிகளவு உற்பத்தியை பல பயிர்களில் செயல்படுத்தி முன்னோடி விவசாயிகள் அதிக லாபம் பெற்று வருகின்றனர். ÷இந்த செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் கொண்டு புதிய வேளாண் முயற்சிகள் குறித்து அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கத் துறை உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீன் தெரிவித்தது:

கரும்பில் செம்மை சாகுபடி முறை தொழில்நுட்பம்: கர்நாடக மாநில கரும்பு விவசாயிகள் சோதனை அடிப்படையில் ஒற்றை கணுக்கள் கொண்ட கரும்பு நாற்றங்காலை அமைத்து சாகுபடிப் பணிகளை மேற்கொண்டனர். பின்னர் 25 முதல் 35 நாளில் நாற்றங்காலில் இருந்து வயல்களில், தோட்டங்களில் நடும்போது 5 அடி இடைவெளி வரப்புகளுக்கும், வரப்புகளுக்கு உள்ளே 2 அடி இடைவெளியை கொண்டு அமைத்தனர். மேலும் குறைந்தளவு தேவைப்படும் ஈரப்பதம், அதிகளவு இயற்கை உரங்களை கொண்டும் தேர்வு செய்யப்பட்ட குறைந்தளவு பயிர் பாதுகாப்பு முறைகள் வாயிலாக அதிகளவு லாபம் பெற்றுள்ளனர்.

துவரையில்... மானாவாரி நிலங்களில் மணிலா, கேழ்வரகு சாகுபடியில் ஊடுபயிராக துவரை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. மறுபுறம் நீர்ப்பாசனம் உள்ள நிலங்களில் அதிகளவு இடைவெளி, குறைந்தளவு விதை, களை நிர்வாகம் கொண்டு கோலார் மாவட்டத்தில் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பருவ மாற்றம் காரணமாக மழை தாமதமாகும்போது துவரை செடிகளை பாலித்தீன் பைகள் கொண்டு பாதுகாத்து 35 முதல் 40 நாளில் தோட்டங்களில் நேரடியாக நடவு செய்யப்பட்டன. இதன் வாயிலாக குறைந்த செலவில் சிறு, குறு விவசாயிகள் அதிகளவு லாபம் பெற முடிகிறது.

கேழ்வரகில்... கர்நாடக மாநிலம் கோலார் மாவட்ட விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை கொண்டு தங்களது முக்கிய உணவுப் பயிரான ராகியை தொடர்ச்சியாக வெற்றிகரமாக சாகுபடி செய்து வருகின்றனர்.

செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை கொண்டும், குறைந்த விதைகளை கொண்டும் சாகுபடிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஏக்கருக்கு 2 கிலோ அளவில் விதைகள் தேர்வு செய்யப்பட்டு நாற்றங்கால் அமைக்கப்படுகிறது.

பின்னர் 15 முதல் 18 நாளில் இளம் நாற்றுகள் உருவாக்கப்பட்டு அவை 1 அடி இடைவெளியில் வயல்களில் நேரடியாக நடவு செய்யப்படுகிறது. சிறு, குறு விவசாயிகள் நீண்ட இடைவெளி கொண்ட நாற்றங்கால் பண்ணைகளை அமைத்து செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அதிக மகசூல், லாபம் பெறுகின்றனர்.

செம்மை நெல் சாகுபடியில் முறையில் புதிய வெற்றி முயற்சிகள்: பல வேளாண் தன்னார்வ கொண்டு நிறுவனங்கள், பல்கலைக்கழக வேளாண் புலங்கள், வேளாண் அறிவியல் மையங்கள் வாயிலாக செம்மை நெல் சாகுபடி முறையை பற்றி தெரிந்துகொண்ட பல முன்னோடி விவசாயிகள் தங்களின் ஆக்கப்பூர்வமான விரிவாக்க முயற்சிகள் வாயிலாக புதிய தொழில்நுட்ப மாற்றங்களை செம்மை நெல் சாகுபடியில் பயன்படுத்தி
யுள்ளனர்.
பங்காரபட்டு, திருச்சி மாவட்ட விவசாயிகள் செம்மை நெல் சாகுபடியில் பிளாஸ்டிக் பி.வி.சி. பைப்புகளை மார்க்கமாக பயன்படுத்துகின்றனர். மேலும் நாற்றங்கால் வளர்க்க பழைய துணிகளை பயன்படுத்தி எளிதாக செம்மை நெல் நடவு பணிகளை மேற்கொள்கின்றனர். ÷இதனால் மறுநடவு அதிர்வுகள் இல்லாமல் நெல் பயிர் நன்றாக, வேகமாக வளர்கிறது. இவை தவிர பசுந்தாழ் உரங்கள், உயிரியல் உரங்கள் வாயிலாகவே செம்மை நெல் சாகுபடியில் அதிகளவு மகசூல் பெறுகின்றனர்.

சில முன்னோடி விவசாயிகள் சமுதாய நாற்றங்கால் அமைத்து செம்மை நெல் சாகுபடியை பிற விவசாயிகள் மேற்கொள்ள உதவி செய்து வருகின்றனர். கர்நாடக மாநிலம் மகபூபா நகர் விவசாயிகள், நாற்றங்காலில் விதைகளை தூவி சீரான நெல் வளர்ச்சியை பெறுகின்றனர்.
எனவே தமிழகத்தின் சிறு, குறு விவசாயிகள் பண்ணை மகளிர், விவசாயத் தொழிலாளர்கள் செம்மை நெல் சாகுபடி முறையிலான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பிற பயிர்களில் அதிகளவு உற்பத்தி, உற்பத்தி திறன் பெருக்கம் பெற முடியும்.
தற்போதைய செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை முன்னோடி விவசாயிகள் புதிய தொழில்நுட்ப மாற்றங்கள் வாயிலாக அதிக லாபம் பெற முடியும் என்பதே ஆராய்ச்சியாளர்களின் கருத்து.

**மே மாதத்தில் மணிலாவுக்கு நல்ல விலை**

நமது நிருபர்

First Published : 17 Mar 2011 12:21:33 AM IST

கடலூர் : மே மாதத்தில் அறுவடைக்கு வரும் மணிலாவுக்கு (வேர்க்கடலை) நல்ல விலை கிடைக்கும் என்று வேளாண் பல்கலைக்கழகம் தெரிவிக்கிறது.
÷உலக அளவில் மணிலா உற்பத்தியில் சீனா முதல் இடத்திலும் இந்தியா 2-வது இடத்திலும், இந்தோனேஷியா, சூடான் ஆகிய நாடுகள் முன்னணியிலும் உள்ளன.

இந்தியாவில் தமிழகம், குஜராத், ஆந்திரம், ராஜஸ்தான், கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் மணிலா அதிகம் பயிரிடப்படுகிறது. 2010 கரீப் பருவத்தில் இந்தியா 9.50 மில்லியன் டன் சமையல் எண்ணெய் இறக்குமதி செய்துள்ளது. 2009-2010 ம் ஆண்டில் மணிலா உற்பத்தி 51.20 லட்சம் டன்கள். இதில் கரீப் பருவத்தில் மட்டும் உற்பத்தி 32.90 லட்சம் டன்கள். 2010-11ம் ஆண்டு கரீப் பருவத்தில் மணிலா உற்பத்தி 41 லட்சம் டன்னாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

÷இந்தியாவில் மணிலா மொத்த உற்பத்தியில் குஜராத் 45.61 சதவீதமாகவும், ஆந்திரம் 14.63 சதவீதமாகவும், தமிழகம் 4.88 சதவீதமாகவும் உள்ளன. தமிழகத்தில் மணிலா பயிரிடும் பரப்பளவு 4.89 லட்சம் ஹெக்டேராகவும், உற்பத்தி 10.26 லட்சம் டன்னாகவும் உள்ளது.
÷திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், நாமக்கல், ஈரோடு மாவட்டங்களில் மணிலா அதிகம் பயிரிடப்படுகிறது. ஹெக்டேருக்கு கிடைக்கும் உத்தேச மகசூல் 1,775 கிலோ.
÷தமிழகத்தில் தை மாதப் பட்டத்தில் ( ஜனவரி 15 முதல் பிப்ரவரி 15 வரை) விதைக்கப்பட்டுள்ள மணிலா ஏப்ரல், மே மாதங்களில் அறுவடைக்கு வரும். விவசாயிகளுக்கு இந்த காலக்கட்டத்தில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் செயல்படும் உள்நாட்டு, ஏற்றுமதி தகவல் மையம் ஆய்வு செய்து, கீழ்க்காணும் முடிவுகளை வெளியிட்டு உள்ளது.

அதன்படி, மே 2011 வரை மணிலாவுக்கு கிலோ ரூ. 34 முதல் ரூ. 36 வரை விலை கிடைக்கும். ஈரோடு மாவட்டத்தில் உற்பத்தியாகும் மணிலா பெருமளவு கடலை மிட்டாய் செய்ய பயன்படுத்தப்படுவதாலும், எண்ணெய் எடுக்க குறைந்தளவே பயன்படுத்தப்படுவதாலும் இந்த மாவட்டத்தில் உற்பத்தியாகும் மணிலா கிலோவுக்கு ரூ. 1 முதல் ரூ. 2 வரை கூடுதலாக கிடைக்கும்.
இதன் அடிப்படையில் தை பட்ட மணிலாவுக்கு நல்ல விலை கிடைக்கும் என்று எதிர்பார்ப்பதாக வேளாண் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

**கிளேடிஓலஸ் மலர் சாகுபடி: விஞ்ஞானி ஆய்வு**

First Published : 17 Mar 2011 12:21:02 AM IST

சிதம்பரம், மார்ச் 16: சிதம்பரம் அருகே அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண்புல கிராமப்புற விரிவாக்கத்துறை மூலம் பயிரிடப்பட்டுளள வடமாநில வண்ணமலரான கிளேடிஓலஸ் மற்றும் நூல்கோல் சாகுபடி செய்யப்பட்டுள்ளதை ஜம்மு மாநில விஞ்ஞானி மனோஜ்நாசர் அண்மையில் ஆய்வு மேற்கொண்டார்.
÷அண்ணாமலைப் பல்கலைக்கழக கிராமப்புற விரிவாக்கப் பணி மற்றும் ஜம்மு மாநில வேளாண்துறை ஆகியவை இணைந்து சிதம்பரத்தை அடுத்த சி.முட்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் பங்களிப்புடன் கிளேடிஓலஸ் மலர் சாகுபடி செய்ய சமுதாய பண்ணை அமைத்துள்ளனர்.

÷ஜம்முவிலிருந்து கொண்டு வரப்பட்ட விதை கரணைகளைக் கொண்டு பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் தி.ராஜ்பிரவீண், ஆசிரியை சாந்தி ஆகியோர் விரிவாக்கப் பணிகளை மேற்கொண்டனர்.

÷தற்போது கிளேடிஓலஸ் மலருடன் ஊடுபயிராக நூல்கோல் பயிரிடப்பட்டு சாகுபடி செய்யப்பட்டு அறுவடைக்குத் தயாராக உள்ளது. கணேசன், பானுசந்தர் ஆகியோர் தோட்டங்களில் அறுவடைக்குத் தயாராக உள்ள கிளேடிஓலஸ் மற்றும் நூல்கோலை ஜம்மு விஞ்ஞானி மனோஜ் நாசர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

÷பின்னர் சிறப்பாக கிளேடிஓலஸ் மற்றும் நூல்கோல் சாகுபடி பணியில் ஈடுபட்டு வெற்றிகண்ட விவசாயிகள் மற்றும் மாணவர்களை வெகுவாகப் பாராட்டினார். வருகிற சாகுபடி பருவத்தில் அதிகளவு பரப்பளவில் கிளேடிஓலஸ் வண்ணமலர் மற்றும் நூல்கோல் சாகுபடி செய்ய பல்வேறு தொழில்நுட்ப அறிவுரைகளை அவர் விவசாயிகளுக்கு வழங்கினார்.

**விவசாயம் தொடர்பான தகவல்களை தொலைபேசி மூலம் பெறலாம்**

First Published : 16 Mar 2011 12:52:32 PM IST

புதுக்கோட்டை, மார்ச் 15: விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விவசாயம் தொடர்பான சந்தேகங்களுக்கு நிபுணர்களிடம் தொலைபேசி மூலம் ஆலோசனை பெறலாம் என எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனத் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். ராஜ்குமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும், இப்கோ ஐ.கே.எஸ்.எல். நிறுவனமும் இணைந்து விவசாயிகளுக்கு தொலைபேசி மூலம் வாய்மொழி குறுஞ்செய்தி (வாய்ஸ்.எம்.எம்.எஸ்.) அனுப்பும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் இப்கோ ஐ.கே.எஸ்.எல். சிம்கார்டு பயன்படுத்துபவர்களுக்கு இலவசமாக தினந்தோறும் பருவகாலத்துக்கு ஏற்றார் போல் விவசாயம் தொடர்பான 5 வாய்ஸ் எஸ்.எம்.எஸ். அனுப்பப்படுகிறது.

அந்தச் செய்தி தொடர்பான மேலும் விவரங்களை நிபுணர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளலாம். இந்தத் திட்டத்தில் ஒரு பகுதியாக மாதந்தோறும் தொலைபேசி மூலம் விவசாயத் துறை நிபுரணர்களிடம் விவசாயம் தொடர்பான ஆலோசனைகளை தொலைபேசியில் பெறும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்துக்கு போன்-இன்-நிகழ்ச்சி என்று பெயர்.

இந்நிகழ்ச்சி புதுக்கோட்டை எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன, அன்னவாசல் கிராம வள மையத்தில் இந்த மாதம் 19 ஆம் தேதி நடைபெற உள்ளது. விவசாயிகள் காலை 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை 97912 78174 என்ற கைபேசி எண்ணில் தங்களது கேள்விகளை பதிவு செய்து கொள்ளலாம். மதியம் 2 மணிக்கு விவசாயத் துறை நிபுணர்கள் பி.டி. செந்தில்குமார்

மற்றும் என். சுமதி ஆகியோர் பதிவு செய்த விவசாயிகளின் தொலைபேசியை தொடர்பு கொண்டு, அவர்களது கேள்விகளுக்கான பதில்களை அளிப்பார்கள்.

எனவே, விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

**அனைத்து கூட்டு உரங்களும் தனியாருக்கு வழங்கக் கோரிக்கை**

First Published : 16 Mar 2011 01:18:54 PM IST

திருச்சி, மார்ச் 15: அனைத்து நிறுவனங்களின் கூட்டு உரங்களையும் தனியார் விற்பனையாளர்களுக்கு வழங்க வேண்டும் என திருச்சி மாவட்ட விவசாய இடுபொருள் விற்பனையாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

திருச்சியில் இந்தச் சங்கத்தின் பொதுக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் சண்முகநாதன் தலைமை வகித்தார்.

"கூட்டு உரங்களில் இப்கோ நிறுவனத்தைத் தவிர இதர அனைத்து நிறுவனங்களின் கூட்டு உரங்களையும் தனியார் விற்பனையாளர்களுக்கு வழங்க வேண்டும்.

டிஏபி உரத்தைப் பொருத்தவரை 50 சதம் கூட்டுறவுக்கும், 50 சதம் தனியார் விற்பனையாளர்களுக்கும் வழங்கும் நிலை இப்போது நடைமுறையில் உள்ளது. ஆனால், கலப்பு உரங்களைத் தயாரித்து விற்பனை செய்ய வேண்டியிருப்பதால் தனியாருக்கு 75 சதமாக உயர்த்தி வழங்க வேண்டும். சில்லறை விற்பனையாளர்களுக்கு அனைத்து வகை உரங்களும் கிடைக்கும் வகையில் நிறுவனங்கள் இருப்பு வைத்து வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும். உரத்தின் விலையை உயர்த்தி அரசு அறிவித்த பிறகும் உர நிறுவனங்கள் பழைய அதிகபட்ச சில்லறை விலை உள்ள சாக்குகளில் உரங்களை வழங்குகின்றன. புதிய விலைக்கு பழைய விலை அச்சிடப்பட்ட சாக்குகளிலேயே வழங்குவதால் விவசாயிகளிடம் விற்பனை செய்யும்போது பிரச்னைகள் ஏற்படுகின்றன.

எனவே, விலை மாற்றத்தின்போது புதிய விலை அச்சிடப்பட்ட சாக்குகளில் வழங்க அரசு கண்காணித்து ஆவண செய்ய வேண்டும்' என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்க உறுப்பினர்களின் குழந்தைகளில் 10, 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்றவர்களுக்கு ஊக்கப் பரிசுகளை மண்ணச்சநல்லூர் சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி முதல்வர் கி. சேகர் வழங்கினார்.

வேளாண் துறை இணை இயக்குநர் ஜே. சேகர், சங்கத்தின் மாநிலத் தலைவர் பி. விஜய் நடராஜ், செயலர் ஏ.எம். சீதாராமன், இணைச்செயலர் ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ராஜபாளையத்தில் மழை இல்லாததால் விவசாயிகள் ஏமாற்றம்**

First Published : 16 Mar 2011 10:58:13 AM IST

ராஜபாளையம், மார்ச் 15: ராஜபாளையத்தில் கடந்த இரு நாளாக மழை பெய்வதற்கான காலநிலை நிலவியும், மழை இல்லாததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். சில வாரங்களாக வாட்டி எடுத்துவரும் வெயில் காரணமாக ராஜபாளையம் ஆறாவது மைல் குடிநீர்த் தேக்கத்தில் தண்ணீர் வேகமாக வற்றி வருகிறது. ராஜபாளையம் நகரில் கோடையில் நிலவும் வறட்சியில் போதியகுடிநீர் வழங்க 2-வது புதிய நீர்த்தேக்கத்தில் நீரைத் தேக்க வசதியாக தடுப்பு அணை கட்ட வனத் துறை இன்னும் அனுமதி வழங்காததால் புதிய குடிநீர்த் தேக்கத்தில் நீர் நிரப்ப முடியாத சூழ்நிலை நிலவுகிறது.

ராஜபாளையம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதியில் போதிய மழையில்லாமல் கடும் வெயில் வாட்டி எடுத்து வருகிறது. இதனால் விவசாயத் தொழிலுக்கு தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. போதிய நீர் பாய்ச்ச முடியாமல் இந்தப் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள கரும்பு, தென்னை, மா போன்றவை வாடிவருகின்றன. இதனால் விவசாயிகள் தொடர்ந்து ஏமாற்றம் அடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் ராஜபாளையம் நகருக்கு குடிநீர் விநியோகிக்கப்படும் ஆறாவது மைல் குடிநீர்த் தேக்கத்தில் கடந்த மாதம் முழு அளவில் தண்ணீர் நிரம்பி இருந்தது. தற்போது கடும் வெயில் காரணமாக 20 அடியிலிருந்து 12 அடியாக தண்ணீர் குறைந்து விட்டது.

ராஜபாளையம் நகரில் அதிகரித்துவரும் மக்கள் தொகையை கணக்கில் வைத்து 2006-ல் எல்.ஐ.சி. கடன் உதவித் திட்டத்தில் சுமார் ரூ.22.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் மத்திய, மாநில அரசு மானிய உதவியுடன் புதிதாக நீர்த்தேக்கம் கட்டப்பட்டது.

இந்த நீர்த்தேக்கத்துக்கு அருகில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலை ஆறுகளில் கிடைக்கும் நீரை அணைக்கு திருப்பிவிட புதிய தடுப்பு அணை கட்ட வனத்துறை இதுவரை அனுமதி வழங்காததால் அணை கட்ட நிதி ஒதுக்கப்பட்டும் புதிய நீர்த்தேக்கத்தில் நீர் நிரப்ப முடியாத நிலை காணப்படுகிறது.

இதுகுறித்து ராஜபாளையம் நகராட்சி அதிகாரி ஒருவர் தெரிவித்தது:

இப்போது ராஜபாளையம் நகர் பகுதிக்கு 3 நாளுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. தினமும் 110 லட்சம் லிட்டர் நீர் தேவைப்படும். ஆனால் தற்போது நீர்தேக்கம் மற்றும் இதைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள கிணறுகள் மற்றும் 32 ஆழ்குழாய் கிணறுகள் மூலம் 80 லட்சம் லிட்டர் நீர் பெறப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. வனப்பகுதியில் அவ்வப்போது மழை பெய்யும் போது நீர்த்தேக்கத்துக்கு முடங்கியாறு, மலட்டாறு, முள்ளிக்கடவு வழியாக பரவலாக தண்ணீர் வந்து தேங்குகிறது.

நகர் பகுதிக்குத் தேவையான தண்ணீர் கோடையிலும் தட்டுப்பாடின்றி வழங்க புதிய நீர்த்தேக்கத்துக்கு கீழ்பகுதியில் செல்லும் ஆறுகளில் வரும் தண்ணீர் தடுப்பு அணை கட்டி திருப்பி விடப்பட்டால் போதிய பலன் கிடைக்கும்.

ஆனால் தடுப்பு அணை கட்டும் இடம் வனத்துறையிடம் உள்ளதால் இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. இதனால் தடுப்பு அணை கட்டும் பணி நடைபெறவில்லை. தடுப்பு அணை கட்ட வனத்துறை உடனடியாக அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தினமலர்

**தர்பூசணி சீசனால் லாரி தட்டுப்பாடு தேங்கி கிடக்குது நெல் மூட்டைகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 17,2011,03:13 IST

செஞ்சி : விழுப்புரம் மாவட்டத்தில் வாடகை லாரி பற்றாக்குறை ஏற்பட்டதால் நெல் மூட்டைகளை வெளி மாவட்டத்துக்கு அனுப்ப முடியாமல் வியாபாரிகள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். விழுப்புரம் மாவட்டம் செஞ்சி, திண்டிவனம், திருக்கோவிலூர் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தர்பூசணி சாகுபடி செய்துள்ளனர். கடந்த சில நாட்களாக தர்பூசணி அறுவடை நடந்து வருகிறது. இங்கிருந்து தர்பூசணி பழங்களை சேலம், ஈரோடு, பெங்களூருவுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்கின்றனர்.

நாள் ஒன்றுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் இருந்து 100க்கும் மேற்பட்ட லாரிகளில் தர்பூசணி ஏற்றிச் செல்கின்றனர். தர்பூசணி லோடு ஏற்றி செல்லும் லாரிகளுக்கு வழியில் எந்த மாமூலும் கொடுப்பதில்லை. அத்துடன் கூலி தொழிலாளர்களுக்கு ஏற்று மாமூல், இறக்கு மாமூலும் எதுவுமில்லை. குறைந்த டன் எடையோடு செல்லும் தர்பூசணி லோடுக்கு மற்ற பொருட்களை ஏற்றி செல்வதை விட ஒன்றரை மடங்கு கூடுதல் வாடகை கிடைக்கிறது. இதனால் நிகர லாபம் பார்க்கும் லாரி டிரைவர்கள் நெல் ஏற்றி செல்வதை தவிர்க்கின்றனர்.

கடந்த வாரம் செஞ்சியில் இருந்து காங்கேயம் செல்ல நெல் மூட்டை ஒன்றுக்கு வாடகை 45 ரூபாயாக இருந்தது, இந்த வாரம் 60 ரூபாயாக உயர்ந்துள்ளது. இதே போல் திருச்சி, ஈரோடு, சேலத்திற்கும் 12 முதல் 15 ரூபாய் வரை வாடகை உயர்ந்துள்ளது. அதிக வாடகை கொடுத்தாலும் போதுமான அளவிற்கு லாரிகள் கிடைக்க வில்லை. இதனால் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான வியாபாரிகள் கொள் முதல் செய்துள்ள நெல் மூட்டைகளை வெளிமாவட்ட வியாபாரிகளுக்கு அனுப்ப முடியாமல் தேக்கமடைந்துள்ளன.

**மஞ்சள் அறுவடையில் தொழில்நுட்பம் பயன் பெற விவசாயிக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 17,2011,01:09 IST

ராசிபுரம்: "மஞ்சள் அறுவடையின் போது, தொழில் நுட்பங்களை கடைபிடித்து விவசாயிகள் பயன்பெறலாம்' என, வெண்ணந்தூர் ஒன்றிய தோட்டக்கலை உதவி இயக்குனர் தமிழ்ச்செல்வி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:தற்போது, மஞ்சள் பயிர் குறுகிய கால, மத்திய மற்றும் அதிக வயதுடைய ரகங்கள் அறுவடைக்கு வருகின்றன. இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவது மற்றும் இலைகள் காய்ந்து விடுவது போன்ற அறிகுறிகள் மூலம் மஞ்சள் முதிர்ச்சியை அறியலாம். மஞ்சள் அறுவடை ஜனவரியில் துவங்கி மார்ச் வரை நீடிக்கிறது.அறுவடை செய்யும் பத்து நாட்களுக்கு முன், தரையின் மேல்மட்டத்தில் தண்டு பகுதியை அறுத்து விடவேண்டும்.

அவ்வாறு செய்தால், விரைவில் ஈரப்பதம் குறைந்து மஞ்சள் முதிர்ச்சியடையும். மஞ்சளை சாணி நீர் கொண்டு வேகவைக்கக் கூடாது. வேகவைக்கும் தண்ணீர் அமிலதன்மை உடையதாய் இருந்தால், ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் சமையல் சோடா உப்பு சேர்த்து 45 நிமிஷம் வரை வேகவைக்க வேண்டும்.அறுவடைக்கு பின், மஞ்சளை சேமிப்பது ஒரு முக்கியமான தொழில் நுட்பமாகும். விதைக்கு தேர்வு செய்யும் மஞ்சளை, கிழங்கு அழுகல் நோய் தாக்காத தோட்டங்களில் இருந்து தேர்வு செய்ய வேண்டும்.

அதை கார்பன்டசிம் மருந்து கரைசலில் ஒரு கிராம் மற்றும் மானோ குரோட்டபாஸ் ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மி.லி., என்ற அளவில் கலந்து தயாரிக்கப்பட்ட கரைசலில் 20 நிமிஷம் நனைத்து சேமிக்க வேண்டும்.அதனால், விதை மஞ்சளை கிழங்கு மற்றும் செதில் பூச்சி தாக்குதலில் இருந்து பாதுகாக்கலாம். மஞ்சள் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இத்தொழில் நுட்பங்களை கடைபிடித்து பயன் பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஈரோட்டில் மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : மார்ச் 17,2011,01:17 IST

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு மஞ்சள் வரத்து அதிகரிப்பு, தேவை குறைவால் மஞ்சள் விலை தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருகிறது. விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஈரோடு மார்க்கெட்டில் இரு ஆண்டுகளாக மஞ்சள் விலை வரலாறு காணாத வகையில் விற்பனையானது. 2009ல் ஒரு குவிண்டால் மஞ்சள் 16 ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்றது. சென்றாண்டில் 17 ஆயிரத்து 300 ரூபாய் வரை விற்றது.

நடப்பு ஆண்டு ஜனவரி மாதம் துவக்கத்தில் விரலி 16 ஆயிரத்து 810 ரூபாய், கிழங்கு 16 ஆயிரத்து 849 ரூபாய்க்கு விற்பனையானது.ஜனவரி இரண்டாவது வாரத்தில் ஈரோடு மார்க்கெட்டுக்கு புது மஞ்சள் வரத்து துவங்கியது. மஞ்சள் வரத்து படிப்படியாக உயர்ந்ததாலும், மஞ்சள் தேவை குறைந்ததாலும் மஞ்சள் விலை குறையத் துவங்கியது. ஜனவரி இறுதியில் விரலி 14 ஆயிரதது 700, கிழங்கு 14 ஆயிரத்து 450 ரூபாய், ஃபிப்ரவரி துவக்கத்தில் விரலி 13 ஆயிரத்து 200 ரூபாய், கிழங்கு 11 ஆயிரத்து 600 ரூபாயாக வீழ்ச்சி அடைந்தது.

மார்ச் துவக்கத்தில் ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு 10 ஆயிரம் முதல் 11 ஆயிரம் மூட்டை வரை மஞ்சள் வரத்தானது. வரத்து அதிகரித்த நிலையில், ஆந்திராவில் தனிமாநிலம் கோரி போராட்டம் நடப்பதால், ஈரோட்டில் இருந்து ஆந்திரா செல்லும் மஞ்சள் மூட்டைகள் நிறுத்தப்பட்டுள்ளது. மஞ்சள் தேவை தொடர்ந்து குறைவாக இருப்பதால் மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் நேற்று முன்தினம் விரலி மஞ்சள் 10 ஆயிரத்து 609 ரூபாய், கிழங்கு மஞ்சள் 10 ஆயிரத்து 109 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்றைய மார்க்கெட்டில் சிறிதளவு மட்டுமே விலை முன்னும் பின்னுமாக இருந்தது.

விரலி மஞ்சள் 10 ஆயிரத்து 810 ரூபாய், கிழங்கு மஞ்சள் 10 ஆயிரத்து 357 ரூபாய்க்கு விற்கப்பட்டது. ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு 1,500 மூட்டைகள், வெளிமார்க்கெட்டுக்கு 7,000 மூட்டைகள், கோபி, ஈரோடு மார்க்கெட்டுக்கு 2,000 மூட்டைகள் வரை வரத்தானது. விவசாயி ஒருவர் கூறியதாவது:சென்ற இரு ஆண்டுகளில் மஞ்சள் விலை நன்றாக விற்கப்பட்டதால் முட்டுக்கூலி செலவு அதிகமாக செலவிட்டு மஞ்சள் பயிரிட்டோம்.

தற்போது மஞ்சள் அறுவடை செய்து விற்பனைக்கு கொண்டு வந்தால் விலை வீழ்ச்சியாக உள்ளது. விலை உயரும் போது விற்கலாம் என தேக்கி வைத்துள்ளோம்.மே, ஜூன் மாதம் வரை மஞ்சள் சீஸன் இருக்கும். அதன் பின், அறுவடை முடிந்து விடுவதால் மஞ்சள் வரத்து குறைந்து விடும். அப்போது மஞ்சள் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**நிரந்தர நெல் கொள்முதல் மையம்: மடத்துக்குளம் மக்கள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : மார்ச் 17,2011,03:30 IST

மடத்துக்குளம் : மடத்துக்குளத்தில் நிரந்தர நெல் கொள்முதல் மையம் அமைக்க கட்சிகள் அளித்த தேர்தல் வாக்குறுதி பல ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் கிடப்பில் உள்ளது.அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனப்பகுதிகளில், 20 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பில், மூன்று போகங்களில் நெல் பயிரிடப்படுகிறது.

திருப்பூர் மாவட்டத்தின் நெற்களஞ்சியம் எனப்படும் மடத்துக்குளம் பகுதியில், நிரந்தர நெல் கொள்முதல் மையம் அமைக்க வேண்டும் என்பது விவசாயிகளின் பல ஆண்டு கால கோரிக்கை.

இதை, தொடர்ந்து அதிகாரிகள் புறக்கணித்து வருகின்றனர்.அறுவடை செய்யப்படும் நெல்லுக்கு உரிய விலை கிடைக்காமல் நஷ்டமடையும் விவசாயிகள் மாற்றுப்பயிருக்கு மாறி வருகின்றனர். இடைத்தரகர்கள் இல்லாமல், விளை பொருளுக்கு உரிய விலை கிடைக்க அரசு நெல் கொள்முதல் மையம் அமைக்க வேண்டுமென விவசாயிகளிடம் எதிர்பார்ப்பு உள்ளது.

ஆனால், நிரந்தர கொள்முதல் மையம் அமைக்காமல், தற்காலிக கொள்முதல் மையம் அமைத்து கண்துடைப்பு நடத்தி வருகின்றனர். ஒவ்வொரு தேர்தலின் போது அனைத்து கட்சியினரும் நெல்கொள்முதல் மையம் அமைக்க வாக்குறுதிகள் அளிக்கின்றனர்; வெற்றி பெற்ற பின்பு, வாக்குறுதிகள் குறித்து கண்டுகொள்வதில்லை.

**பாளை., கல்லூரியில் தாவரவியல் தொழில் நுட்ப தேசிய கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : மார்ச் 17,2011,02:22 IST

திருநெல்வேலி : பாளை., தூய சவேரியார் கல்லூரி தாவரவியல் மற்றும் உயர் தொழில் நுட்பவியல் தேசிய கருத்தரங்கு நிறைவு விழா நடந்தது. பசுமையான, தூய்மையான மற்றும் நிலைத்திருக்க கூடிய ஆற்றல் என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கில் 20 கல்லூரிகளை சேர்ந்த 200 மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டனர். சூரிய ஆற்றல், காற்றாற்றல், நீராற்றல், தாவர ஆற்றல், மண் ஆற்றல் ஆகிய பல தலைப்புகளில் அறிஞர்கள் பேசினர். கல்லூரிகளுக்கு இடையேயான பேச்சுப்போட்டி, ஓவியப் போட்டி, வினாடி-வினா போட்டிகள் நடந்தது.

சிறந்த கண்காட்சிக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மூன்றாம் நாள் நிறைவு விழாவில் நெல்லை கல்லூரி கல்வி இணை இயக்குனர் தனலெட்சுமி தலைமை வகித்தார். பேராசிரியர் ஹென்றி ஜோசப் வரவேற்றார். கருத்தரங்கில் மாணவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். இயற்கையை பாதுகாக்க, மறுசுழற்சி செய்யக்கூடிய, தூய்மையான, பசுமையான ஆற்றலை பயன்படுத்த வேண்டும் என தனலெட்சுமி பேசினார். பேராசிரியர் ஜான் டி பிரிட்டோ நன்றி கூறினார். ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் அல்போன்ஸ் மாணிக்கம், துறை தலைவர் லூயிஸ் ஜேசுதாஸ், அமைப்பு செயலாளர் ஜான் டி பிரிட்டோ செய்திருந்தனர்.

**குருத்துப்பூச்சி தாக்கிய நெற்பயிருக்கு நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : மார்ச் 17,2011,02:20 IST

ஆழ்வார்குறிச்சி : ஆழ்வார்குறிச்சியில் குருத்துப்பூச்சி தாக்கிய பயிர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென விவசாயிகள் கலெக்டருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். ஆழ்வார்குறிச்சி பகுதி, கடனா தென்கால் நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தின் கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனுவில்

கூறியிருப்பதாவது: சில நாட்களுக்கு முன் பெய்த மழையால் தற்போதைய பிசான பருவத்தில் செய்யப்பட்டுள்ள நெல் பயிரில் சுமார் 500 ஏக்கரில் பயிர்கள் முழுமையாக சேதமடைந்து விட்டது.

இதனால் சிறு மற்றும் குறு விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதியில் இந்த பருவ சாகுபடியில் வருமானம் கிடைக்கா விட்டால் எதிர்காலத்தில் கார் பருவம் செய்ய இயலாது. இப்பகுதியில் வண்ணான் மதகு முதல் கோரவாய்க்கால் மடை வரை உள்ள பகுதியில் முழுமையாக சுமார் 500 ஏக்கர் நிலங்கள் பாதிப்படைந்துள்ளது. பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு கடனா தென்கால் நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**சுனாமி பாதிப்பால் இறங்கியது ரப்பர் விலை**

பதிவு செய்த நாள் : மார்ச் 17,2011,01:47 IST

திற்பரப்பு : ஜப்பானில் சுனாமிக்கு பின் இறங்கு முகத்தில் இருந்த ரப்பர் விலை தாய்லாந்து அரசின் அதிரடி நடவடிக்கையால் ஏறுமுகத்தில் உள்ளது. குமரி மாவட்ட மக்களின் முக்கிய பணப்பயிரான ரப்பர் கடந்த சில மாதங்களாக வரலாறு காணாத அளவிற்கு விலை உயர்ந்தது. சாதாரண லாட் ஷீட் 250 ரூபாய்க்கும், கிரேடு ஷீட்டுகள் சுமார் 300 ரூபாய் வரையும் விற்கப்பட்டது. சர்வதேச சந்தையில் ரப்பரின் விலை உயர்ந்தாலும், இயற்கை ரப்பர்களின் தேவை அதிகாரித்ததாலும், விலை இந்த அளவிற்கு உயர்ந்ததாக கூறப்பட்டது.

மேலும் ரப்பர் உற்பத்தி குறைவாக உள்ளதாலும், ரப்பரின் விலை 350ஐ தாண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ரப்பரின் விலை அதிகரித்ததால் மாவட்டத்தில் ரப்பர் பயிரிட தகுதியில்லாத இடங்களிலும் ரப்பர் பயிரிடப்பட்டது. வயல்வெளிகளும், தென்னை விளைநிலங்களும் ரப்பர் தோட்டங்களாக மாறிவருகிறது. உலக அளவில் அதிகமாக ரப்பர் கொள்முதல் செய்யும் ஜப்பானில் நிலநடுக்கம் மற்றும் சுனாமி பாதிப்புகள் ஏற்பட்டதால் சர்வதேச சந்தையில் ரப்பர் விலை குறைந்துள்ளது.

இதனால் ஏறுமுகத்தில் காணப்பட்ட ரப்பரின் விலை கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து இறங்கு முகத்தில் உள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன் லாட் ஷீட் 194 ரூபாய்க்கும், ஆர்.எஸ்.எஸ் -4 கிரேடு ஷீட் 204 ரூபாய்க்கும் விற்பனையானது. அதன் பிறகு லாட் ஷீட் 19 ரூபாய் குறைந்து 175 ரூபாய்க்கும், ஆர்.எஸ்.எஸ் -4 கிரேடு 22 ரூபாய் குறைந்து 182 ரூபாய்க்கும் விற்பனையானது. ஒரே நாளில் 20 ரூபாய் வரை ரப்பர் விலை வீழ்ச்சியடைந்தது ரப்பர் விவசாயிகள் மத்தியிலும், வியாபாரிகள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. தொடர்ந்து விலை இறங்கியதால் விவசாயிகளிடம் இருந்து ரப்பர் வாங்க வியாபாரிகள் தயங்கினர்.

அதிகளவு ரப்பர் தேவைப்படும் நாடுகள் விலை குறைத்ததால் ரப்பர் வியாபாரிகள் அதிகளவு கையிருப்பு வைக்க துவங்கினர். இவ்வாறு அதிக ரப்பர் தேங்கும் போது ரப்பர் தேவைப்படும்

மற்ற நாடுகளுக்கு ரப்பர் கிடைக்க வாய்ப்பு இல்லாமல் போகும். எனவே அதிகளவு கையிருப்பை கட்டுப்படுத்தும் வகையில் தாய்லாந்து அரசு மானியம் வழங்க முன்வந்தது. இதனால் ரப்பரின் விலை உலக மார்க்கெட்டில் ஒரே நாளில் கிலோவிற்கு 10 ரூபாய் அதிகரித்து சுமார் 190 ரூபாய்க்கு நேற்று விற்கப்பட்டது.

**சிவகங்கை வார சந்தையில் காய்கறி விலை குறைவு**

பதிவு செய்த நாள் : மார்ச் 17,2011,03:03 IST

சிவகங்கை:சிவகங்கை வார சந்தையில் காய்கறி விலை குறைந்துள்ளது.வெண்டைகாய் - 20; பாகற்காய்- 20; 40க்கு விற்ற முருங்கை பீன்ஸ்- 30; கேரட்- 30; 15க்கு விற்ற முள்ளங்கி-10; கத்தரிக்காய்- 20; 12 க்கு விற்ற உருளைகிழங்கு-15; 15 க்கு விற்ற முட்டைகோஸ்-10; 7 க்கு விற்ற தக்காளி -10; கருணை கிழங்கு- 30; இஞ்சி- 30; இரண்டாவது ரகம் - 25; அவரைக்காய்- 20; பட்டர் பீன்ஸ்- 80; 40 க்கு விற்ற வெங்காயம்- 35; 20 க்கு விற்ற பெல்லாரி- 15; காலிபிளவர்- 20; சேணை கிழங்கு- 30; சேம்பு- 30; 10 க்கு விற்ற பச்சை மிளகாய்-15; 24க்கு விற்ற பீட்ரூட்- 20; 26க்கு விற்ற நூக்கல் - 30; சோயாபீன்ஸ் - 60; எலுமிச்சை- 25; பீர்க்கை - 24; டர்னிப் - 30; சீனி அவரை -10; 15க்கு விற்ற சவ்சவ் -20; மல்லி தழை- 20; கருவேப்பிலை - 15; பூசணி 20 ரூபாய்க்கு விற்றது.பழங்கள் நிலவரம்:

மாதுளம் பழம் 150; இரண்டாவது ரகம் -120; ஆப்பிள்-120;90 க்கு விற்ற 2 வது ரகம் -100; அந்திரா ஆரஞ்சு-60; 40 க்கு விற்ற கொடை ஆரஞ்சு -60; 40க்கு விற்ற சாத்துக்குடி-50; திராட்சை (வெள்ளை) -80; மஸ்கட் (கருப்பு) -100; கருப்பு (பன்னீர்) -40; அன்னாசி பழம்-30; சப்போட்டா - 20, கொய்யாப்பழம் -30 ரூபாய்க்கும் விற்றது. ஆப்பிள், மாதுளை வரத்து குறைந்து வருவதால் கோடையில் இன்னும் விலை அதிகரிக்கும் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**மட்கி போகும் கடத்தல் மரங்கள்:"மண்ணாகும்' வனத்துறையின் முயற்சிகள்**

பதிவு செய்த நாள் : மார்ச் 16,2011,23:54 IST

கூடலூர் : கூடலூர் வனத் துறையினரால் பறிமுதல் செய்யப்படும் கடத்தல் மரங்கள் பாதுகாப்பின்றி திறந்த வெளியில் கிடப்பதால் அவை உபயோகமில்லாத நிலையில் மட்கி வருகின்றன.கூடலூர் பகுதியில் மரக் கடத்தல் உள்ளிட்ட வன குற்றங்கள் அதிகளவில் நடந்து வருகிறது. வனத்துறையினர் அவ்வப்போது சோதனை மேற்கொண்டு கடத்தல் மரங்களையும், அதற்கு பயன்படும் வாகனங்களையும் பறிமுதல் செய்து வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்படும் விலை உயர்ந்த மரங்களை வழக்கு முடியும் வரை பாதுகாப்பது வனத்துறையினர் கடமையாகும்.மரங்களை பாதுகாப்பாக வைக்க வசதியில்லாததால், பறிமுதல்

செய்யப்பட்ட பெருமளவிலான மரங்கள் வனச்சரக அலுவலகங்கள் அருகே, திறந்த வெளியில் மண்ணில் போட்டு வைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான வழக்குகள் முடிவுக்கு வர பல ஆண்டுகள் ஆகும்.

அதுவரை மரங்கள் திறந்த வெளியில் மழை, வெயிலில் கிடந்து மட்கி மண்ணோடு,மண்ணாக மாறி வருகிறது. வழக்கு முடியும் போது, அரசுக்கு எந்த வருமானமும் இன்றி மரங்கள் பயனற்ற நிலைக்கு மாறும் சூழ்நிலை உருவாகி வருகிறது.கூடலூர் வன கோட்டத்தில் பறிமுதல் செய்யப்படும் விலையுயர்ந்த ஈட்டி உள்ளிட்ட கடத்தல் மரங்களை, வழக்குகள் முடியும் வரை பாதுகாப்பாக வைக்க, வனத்துறையினருக்கு குடோன் வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், கஷ்டப்பட்டு பறிமுதல் செய்யப்படும் விலை உயர்ந்த கடத்தல் மரங்களால் அரசுக்கு பெரும் இழப்பீடு ஏற்படுவதை தடுக்க முடியாது.

**"உற்பத்திக்கேற்ப சேமிப்பு கிடங்குகள் அவசியம்'**

பதிவு செய்த நாள் : மார்ச் 16,2011,23:14 IST

கோவை : "" நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவு பொருட்களுக்கேற்ப சேமிப்பு கிடங்கு வசதிகளை மேம்படுத்த வேண்டியது அவசியம்," என, இந்திய தொழில் வர்த்தக சபை ஆலோசகர் விட்டல் பேசினார். இந்திய தொழில் வர்த்தக சபை கோவை மண்டலம் சார்பில், மத்திய அரசின் பட்ஜெட் 2011-12 குறித்த கூட்டம் அவிநாசி ரோட்டிலுள்ள சேம்பர் டவர்ஸ்சில் நடந்தது. நிகழ்ச்சியில், இந்திய தொழில் வர்த்தக சபை சட்ட ஆலோசகர் விட்டல் பேசியதாவது: நடப்பாண்டுக்கான மத்திய அரசின் பட்ஜெட்டில் கட்டுமானத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நாடு வளர சிறந்த கட்டுமானம் கொண்டிருத்தல் அவசியம்.

நெடுங்கால முதலீட்டு திட்டங்கள் சிறந்தவை. நம் நாட்டின் மக்கள் தொகையில் 65 சதவீதத்தினருக்கும் அதிகமானோர் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்நிறுவனங்களில் ஈடுபட்டுள்ளனர்.நாட்டில் உணவு பொருட்கள் விலை உயர்வுக்கு பருவமழை பொய்த்தது மட்டும் காரணமாக கூறுவது ஏற்புடையதல்ல.

உற்பத்தி செய்யப்படும் உணவு பொருட்களுக்கேற்ப சேமிப்பு கிடங்கு வசதிகளை மேம்படுத்த வேண்டும். சர்வதேச அளவில் காற்றாலை மின்உற்பத்தியில் தமிழகம் சிறந்து விளங்குகிறது. அயல்நாட்டினர் மியூச்சுவல் பண்ட் உள்ளிட்டவையில் நேரடி முதலீடு செய்ய வாய்ப்பு ஏற்படுத்தியுள்ளது வரவேற்கத்தக்கது.இவ்வாறு, விட்டல் பேசினார்.வக்கீல் விஜயராகவன் பேசுகையில் ""மத்திய அரசின் பட்ஜெட் வரவேற்கத்தக்க வகையில் அமைந் தள்ளது.

எனினும், மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி லோக்சபாவில் அறிவித்த பட்ஜெட் திட்டங்களில் எத்தனை நடைமுறைப்படுத்தப்படும் என்பதை பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும்," என்றார். தொடர்ந்து பட்ஜெட் குறித்து தொழில்நுட்ப கருத்துக்களை கூறினார்.

***மானியத்தை அதிகரிக்க அரசு முடிவு கலப்பு உர நிறுவனங்களின் லாப வரம்பு உயர வாய்ப்பு***



*பாருல் பட்நாகர்*

*இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு*

*கலப்பு உரங்கள் உற்பத்தியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கான மானியத்தை கணிசமாக அதிகரிக்க மத்திய அரசு அண்மையில் முடிவு செய்தது. இதனால் இத்துறை நிறுவனங்கள் உற்சாகமடைந்துள்ளன. மேலும் பங்குச் சந்தைகளில் கடந்த சில தினங்களில் கலப்பு உர நிறுவனங்களின் பங்குகளின் விலை அதிகரித்துள்ளது. சென்ற இரண்டு வாரங்களில் கோரமண்டல் இன்டர்நேஷனல் மற்றும் குஜராத் ஸ்டேட் பெர்டிலைசர்ஸ் போன்ற நிறுவனங்களின் பங்குகளின் விலை 9 முதல் 20 சதவீதம் வரை உயர்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் யூரியா உர உற்பத்தியாளர்கள் மானியம் குறித்த தெளிவான அறிவிப்புகளுக்காக தொடர்ந்து காத்திருக்கின்றனர்.*

கூடுதல் மானியம்

சர்வதேச சந்தைகளில் மூலப்பொருள்களின் விலை அதிகரித்து வருவதால் வரும் நிதி ஆண்டில் கலப்பு உரங்களுக்கான மானிய விகிதங்களை மத்திய அரசு திருத்திஅமைத்துள்ளது. 2010–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அறிவிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் இது 30–45 சதவீதம் அதிகமாகும். இதனால் கலப்பு உர நிறுவனங்களுக்கு நடப்பு நிதி ஆண்டை விட, வரும் நிதி ஆண்டில் 10–15 சதவீதம் அதிகமாக மானியம் கிடைக்கும். மேலும் நைட்ரஜன், பாஸ்பேட் மற்றும் பொட்டாஷ் ஆகிய உரங்களைப் பொறுத்தவரை அடுத்த நிதி ஆண்டில் டன் ஒன்றுக்கு முறையே 18.3 சதவீதம், 11.9 சதவீதம் மற்றும் 0.6 சதவீதம் கூடுதல் மானியம் கிடைக்கும். அதே சமயம் கந்தகத்துக்கான மானியம் 5.2 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

பங்குச் சந்தைகளில்...

சென்ற ஆண்டு நவம்பர் மாதத்தில், 2011–12 நிதி ஆண்டுக்கு கலப்பு உரங்களுக்கான மானியம் குறைக்கப்படுவதாக அரசு அறிவிப்பு வெளிவந்ததும் பங்குச் சந்தைகளில் எதிர்மறை விளைவுகள் ஏற்பட்டன. குறைவான மானியம் உர நிறுவனங்களின் லாப வரம்பை பாதிக்கும் என்பதே இதற்கு காரணமாகும். மேலும் கலப்பு உரங்கள் வாயிலாகவே வருவாயில் பெரும்பகுதியை ஈட்டும் நிறுவனங்களின் லாப வரம்பு கடுமையாக சரிவடையும் நிலை ஏற்பட்டது. இதனால் சர்வதேச நிறுவனங்களிடம் மூலப்பொருள்கள் விலையை குறைக்கும்படி கேட்க வேண்டிய நிலைக்கு இந்த நிறுவனங்கள் வந்தன.

சில்லரை விற்பனை

மேலும், 2011 ஏப்ரல் மாதம் 1–ந் தேதியிலிருந்து சில்லரை விற்பனையில் விவசாயிகளுக்கு உரங்கள் விலையை அதிகரிக்க வேண்டிய நிலைமையும் உருவானது. 2010–11–ஆம் நிதி ஆண்டில் சத்து சார்ந்த உர மானிய கொள்கை அமல்படுத்தப்பட்டபோதும் நிறுவனங்கள் இவ்வாறு உரங்களின் விலையை உயர்த்தின என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் மத்திய அரசு மானிய விகிதங்களை திருத்தி அமைத்துள்ளது உர நிறுவனங்களுக்கு ஆறுதல் அளித்துள்ளது. இதனால் லாப வரம்பு பாதிக்கப்படாது என்பதுடன், சில்லரை விற்பனையில் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயமும் நிறுவனங்களுக்கு இல்லை என்பதால் விவசாயிகளுக்கும் மிகவும் அனுகூலமாக இருக்கும்.

**கடந்த ஆண்டை விட சரிவு ஏற்படலாம் மாம்பழங்கள் விற்பனை ரூ.1,800 கோடியை எட்டும்**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*மும்பை*
*நடப்பு ஆண்டில், மாம்பழங்கள் விற்பனை (உள்நாட்டு விற்பனை + ஏற்றுமதி) ரூ.1,700 கோடி முதல் ரூ.1,800 கோடி வரை நடைபெற வாய்ப்புள்ளது என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. எனினும், சென்ற ஆண்டில் விற்பனை ரூ.2,000 கோடியை எட்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. உற்பத்தியில் சற்றே பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் விற்பனையும் ஓரளவு குறையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.*
*நம் நாட்டில் அல்போன்சா மற்றும் கேசர் ஆகிய மாம்பழ ரகங்கள் அதிகம் விற்பனையாகி வருகின்றன. இவற்றுக்கு உள்நாட்டில் தேவைப்பாடு அதிகமாக உள்ள நிலையில், வெளிநாடுகளுக்கும் கணிசமான அளவில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக ஐக்கிய அரபு நாடுகள், ஐரோப்பிய நாடுகள் மற்றும் இதர ஆசிய நாடுகள் இந்திய மாம்பழங்களை அதிகம் இறக்குமதி செய்து வருகின்றன.*
*இந்நிலையில், அமெரிக்கா இந்திய மாம்பழங்கள் மீதான தடையை நீக்கியுள்ளது ஏற்றுமதியாளர்களுக்கு மிகவும் சாதகமான அம்சம் என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. நடப்பாண்டில் அமெரிக்காவிற்கான மாம்பழம் ஏற்றுமதி சிறப்பாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நியூசிலாந்தும் அதிக மாம்பழங்களை இறக்குமதி செய்யும் என்று தெரிகிறது.*

## அமெரிக்க அமைப்பின் ஆய்வறிக்கையில் தகவல் இந்தியாவில், அதிக பொருளாதார சுதந்திரம் உள்ள மாநிலம் தமிழ்நாடு

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் அதிகபட்ச பொருளாதார சுதந்திரம் கொண்ட மாநிலமாக உள்ளது என ஓர் அமெரிக்க அமைப்பின் அண்மைக் கால ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழகம் – குஜராத்*

*'இந்திய மாநிலங்களில் நிலவும் பொருளாதார சுதந்திரம்–2011' என்ற தலைப்பில் அமெரிக்காவைச் சேர்ந்த கேட்டோ இன்ஸ்டிடியூட் அண்மையில் ஓர் ஆய்வு மேற்கொண்டது. இன்டிகஸ் அனலிட்டிக்ஸ் மற்றும் ஃபிரைடுரிக் நாமன் பவுண்டேஷன் ஆகிய அமைப்புகளின் கூட்டுடன் இந்த ஆய்வு நடத்தப்பட்டது.*

*ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட 20 மாநிலங்களில், கடந்த 2009–ஆம் ஆண்டில் மாநிலங்களின் இயற்கை வளங்கள் பரப்பளவு, சட்டம்–ஒழுங்கு பராமரிப்பு, நிர்வாகத் திறன், வணிகச் சூழல், பாதுகாப்பு அம்சங்கள், தொழிலாளர் நலம், மனிதவளம் மற்றும் சமூக நிலை உள்பட பல்வேறு அம்சங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. குஜராத் இரண்டாவது இடத்தில் உள்ளது.*

*பீகார் மாநிலம்*

*இந்த பட்டியலில் பீகார் மாநிலம் கடைசியில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 2005–ஆம் ஆண்டிலிருந்து தமிழகம் தொடர்ந்து முதலிடத்தை தக்க வைத்துக் கொண்டு வருவதாகவும், பீகார் மாநிலம் தொடர்ந்து கடைசி இடத்திலேயே உள்ளதாகவும் ஆய்வறிக்கை குறிப்பிட்டுள்ளது. இந்திய மாநிலங்களிடையே பொருளாதார சுதந்திரத்தைப் பொறுத்தவரை பெரும் வேறுபாடுகள் காணப்படுவதாகவும், அதிக சுதந்திரம் உள்ள மாநிலங்களின் பொருளாதாரம் இனிவரும் காலங்களில் அபார வளர்ச்சி காண்பதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும் கேட்டோ தெரிவித்துள்ளது.*

*இரண்டாவது இடம்*

*கடந்த 2005–ஆம் ஆண்டில் குஜராத் மாநிலம் ஐந்தாவது இடத்தில் இருந்தது. 2009–ல் மூன்று படிகள் முன்னேறி இரண்டாவது இடத்திற்கு வந்துள்ளது. பொருளாதாரம் மற்றும் வணிக உலகத்தைப் பொறுத்தவரை இம்மாநிலம் ஒழுங்குமுறை விதிகளை திறம்பட செயல்படுத்தி வருவதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே காலத்தில் ஆந்திர மாநிலமும் அதிவேக வளர்ச்சி கண்டு ஏழாவது இடத்திலிருந்து மூன்றாவது*

இடத்திற்கு முன்னேறியுள்ளது.
ஆந்திர மாநிலம் ஊழலைக் குறைத்துள்ளதுடன், புதுமையான பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கேட்டோ பாராட்டியுள்ளது. விவசாயம் மற்றும் அடிப்படை கட்டமைப்பு துறைகள் எழுச்சி கண்டுள்ளது, தீவிரவாதம் ஒடுக்கப்பட்டது போன்ற காரணங்களால் இங்கு வேலைவாய்ப்பு பெருகியுள்ளது. குறிப்பாக மற்ற மாநிலங்களிலிருந்து வேலை தேடி ஏராளமானோர் இங்கு வந்துள்ளனர் என இவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

சமச்சீர் வளர்ச்சி

பல மாநிலங்களில் பொருளாதார சுதந்திரம் வளர்ச்சி கண்டு வரும் வேளையில் சில மாநிலங்களில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்றும், இந்த விஷயத்தில் இந்தியாவில் சமச்சீர் வளர்ச்சி இல்லை என்பதையும் ஆய்வறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. 20–வது இடத்தில் பீகார் உள்ளது. உத்தரகாண்ட் மற்றும் அசாம் முறையே 19 மற்றும் 18–வது இடங்களில் உள்ளன. பீகாரில் சட்டம்–ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு திட்டங்கள் முன்னேற்றம் கண்டுள்ளபோதிலும் தொடர்ந்து கடைசி இடத்திலேயே உள்ளது.

மத்தியபிரதேசம் – பஞ்சாப்

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட காலத்தில் (2005–2009) பொருளாதார சுதந்திரத்தில் சரிவைக் கண்டுள்ள பெரிய மாநிலங்களும் உண்டு. இதில் மத்தியபிரதேசம், ஒரிசா, உத்தரகாண்ட், பஞ்சாப் மற்றும் இமாச்சலபிரதேசம் ஆகியவை அடங்கும். ஒரு காலத்தில் சிறப்புடன் செயலாற்றி வந்த பஞ்சாப், 2009–ஆம் ஆண்டில் 12–வது இடத்துக்கு வந்துள்ளது. இம்மாநிலம் 2005–ல் ஆறாவது இடத்தில் இருந்தது. அரியானா, மேற்கு வங்காளம், ராஜஸ்தான் மற்றும் ஜம்மு – காஷ்மீர் ஆகிய மாநிலங்களில் பொருளாதார சுதந்திரம் ஓரளவு அதிகரித்துள்ளதாக தெரிகிறது. மகாராஷ்டிரா, கேரளா, பீகார், ஜார்க்கண்ட், கர்நாடகா, உத்தரபிரதேசம், அசாம் மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் பொருளியல் சுதந்திரம் சற்றே சரிவினைக் கண்டுள்ளது. மத்தியபிரதேசத்தில்தான் அதிகபட்ச சரிவு ஏற்பட்டுள்ளது. அதே சமயம் இம்மாநிலத்தில் சட்டம்– ஒழுங்கு நிலைமைகள், பாதுகாப்பு அம்சங்கள் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளன.

பொருளாதார சுதந்திரத்தை பொறுத்தவரை பெரும் சரிவை கண்ட மாநிலங்களில், 2004–05 முதல் 2008–09 வரையிலான காலத்தில், மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (ஜி.டீ.பி) 6.7 சதவீதமாக இருந்தது. ஓரளவு சரிவை கண்ட மாநிலங்களில் வளர்ச்சி 8.7 சதவீதமாக இருந்தது. ஆந்திரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களின் ஜி.டீ.பி. வளர்ச்சி சராசரியாக 10.5 சதவீதமாக உயர்ந்துள்ளது.
பொருளாதார சுதந்திரம் குறைவாக உள்ள மாநிலங்கள் பெரும்பாலும் சில குறிப்பிட்ட துறைகளையே அதிகம் சார்ந்துள்ளன. சில மாநிலங்கள் ஒரே துறையை மட்டுமே

நம்பியுள்ளன. வளர்ச்சியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதற்கு இதுவே முக்கிய காரணமாகும். உதாரணமாக பீகார் மாநிலத்தின் வளர்ச்சி என்பது கட்டுமானத் துறையை மட்டுமே சார்ந்துள்ளது. சத்தீஸ்கர் மாநிலத்தில் சுரங்கத் தொழில் மற்றும் விவசாயமே பிரதானமாக உள்ளன.

சென்னை மாநகரம்

தமிழகத்தில் பல்வேறு துறைகளின் சமச்சீர் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அன்னிய நேரடி முதலீடுகளை ஈர்ப்பதில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இதனால் சென்னை மாநகரம் பன்னாட்டு மோட்டார் வாகன நிறுவனங்களின் மையமாக மாறி உள்ளது. விவசாயம் தொடங்கி தகவல் தொழில்நுட்பம் வரை அனைத்து துறைகளிலும் சம அளவில் கவனம் செலுத்தப்படுகிறது. தொழில் துறையினருக்கேற்ற சாதகமான சூழ்நிலை உள்ளதால் முதலீட்டாளர்கள் பெருமளவில் ஈர்க்கப்படுகின்றனர்.

# வேளாண்மை செய்திகள்

## அதிக விளைச்சல் தரும் அவரை சாகுபடி

காய்கறி பயிர்கள் அனைத்தும் இயற்கையின் வரப்பிரசாதம் ஆகும். இவை நம்முடைய அன்றாட உணவில் முக்கியம் அங்கம் வகிக்கிறது. இதில் உடலுக்கு தேவையான சத்துக்கள், வைட்டமின்கள், தாதுக்கள் நிறைந்து உள்ளன. காய்கறி பயிர்களில் ஒன்றான அவரை முக்கிய பயிராகும். இது இந்தியாவின் பீன்ஸ் என்றும் அழைக்கப்படுகிறது.

### அவரை ரகங்கள்

இதன் பிஞ்சு காய்கள் காய்கறியாகவும், முற்றிய விதைகள் விதைப்பு பயிராகவும் பயன்படுத்தப்படுகிறது. முக்கிய வியாபார பயிர் என்று குறிப்பிடப்படுகிறது. காரணம் ஒவ்வொரு வாரமும் காய்கள் கிடைப்பதால் விவசாயிகள் நிலையான வருமானத்தை பெற்று வருகிறார்கள். இது ஒருவகை கொடியாகும்.

அதிக விளைச்சல் தரும் கோ–1, கோ–2, கோ–3, கோ–4 போன்ற ரகங்கள் வேளாண்மை பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியிடப்பட்டு உள்ளன. மற்ற மாநிலங்களில் ரஜ்னி, தசரவால், தீபாளிவால், பூசா ஏர்லி, பிராலிபிக், பூசா செம், போன்ற ரகங்களும் கோ–6 முதல் கோ–11 வரையிலான ரகங்கள் பரவலாக பயிரிடப்பட்டு வருகின்றன.

### சாகுபடி முறைகள்

அவரை சத்துக்கள் நிறைந்த இருமண் பாங்கான மண்வகைகள் சாகுபடிக்கு ஏற்றவை. மண்ணின் கார அமிலத்தன்மை 6.5 முதல் 8.5 வரை இருத்தல் சிறந்தது. அவரை வெப்ப மண்டல பகுதிகளிலும் நன்றாக வளர்ந்து பலன் கொடுக்கும் தன்மை கொண்டது. கொடியில் வளரும் தன்மை கொண்டதால் ஜூலை–ஆகஸ்டு மாதங்களில் பந்தல் அமைத்து சாகுபடி செய்ய வேண்டும்.

மற்றவகைகளை(குத்து) மார்ச், ஏப்ரல், ஜூலை, ஆகஸ்டு, அக்டோபர், நவம்பர் மாதங்களில் சாகுபடி செய்யலாம். சாகுபடிக்கு நிலம் தயாரிக்கும் போது 1.25*1.25 மீட்டர் வரிசை இடைவெளியிலும், 75 செ.மீ. குறுக்காகவும் இடைவெளி விட்டு 45*45*45 செ.மீ. அளவுகளில் குழிகள் எடுத்து மேல்மண், தொழு எரு கலந்து நிரப்பி தயாராக வைக்க வேண்டும்.

### நிரந்தர வருமானம்

நிலத்தை 4 முதல் 8 தடவை உழுது, கடைசி உழவின் போது 20 டன் மக்கிய தொழு எரு இட்டு 60 செ.மீ. இடைவெளியில் பார் பாத்திகளை தயார் செய்து விதைகளை நடவு செய்ய வேண்டும். எக்டேருக்கு 18 கிலோ தழைச்சத்தும், 72 கிலோ மணிச்சத்தும் அடியுரமாக இட வேண்டும். நடவு செய்த 20 நாளில் இருந்து களைகளை எடுத்து சுத்தப்படுத்த வேண்டும்.

பூச்சி, புழு மற்றும் நோய் தாக்குதலில் இருந்து அவரை கொடியை பாதுகாக்க பரிந்துரைக்கப்பட்ட பூச்சிகொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும். நடவு செய்து 50 நாட்களில் காய்கள் காய்த்து அறுவடைக்கு தயாராகி விடும். கொடி அவரையில் எக்டேருக்கு 8 முதல் 12 டன்னும், குத்துவகையில் 4 முதல் 6 டன்னும் மகசூலாக கிடைக்கும். நடவு செய்த குறுகிய நாட்களிலேயே காய்த்து விடுவதால் அவரை விவசாயிகள் நிரந்தர வருமானம் பெற்று வருகிறார்கள்.

–தகவல்: ஆனந்தன், கண்ணன், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை.

## கரும்பு பயிரை தாக்கும் குருத்தழுகல் நோயை கட்டுப்படுத்துவது எப்படி?

### ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் விளக்கம்

தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் பணப்பயிர்களில் முக்கியமானது கரும்பு பயிராகும். இந்த பயிரில் அதிக விளைச்சலை பெற களை நிர்வாகம், நீர் நிர்வாகம், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை பின்பற்ற வேண்டும். மேலும் பூஞ்சான நோய்கள் தாக்கி பெருமளவு சேதத்தை ஏற்படுத்துகிறது. இந்த நோய்களால் மொத்த கரும்பு உற்பத்தியில் 15 சதவீதம் இழப்பு ஏற்படுவதாக கண்டறியப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் வருகிற ஏப்ரல், மே மாதங்களில் கரும்பு நடவை விவசாயிகள் தொடங்க உள்ளனர். நடவு தொடங்கிய 3 மாதம் கழித்து விளைந்த கரும்பில் குருத்தழுகல் நோய் தாக்குதல் ஏற்படும். இதில் இருந்து கரும்பு பயிரை பாதுகாப்பது குறித்து தருமபுரி மாவட்டம் மேலாத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் சுந்தரவதானா, திருமுருகன், புருசோத்தமன், ஆகியோர் விளக்கம் அளித்து உள்ளனர். அதன் விவரம் வருமாறு:–

### குருத்தழுகல் நோய்

கரும்பில் குருத்தழுகல் நோயின் அறிகுறிகள் 3 நிலைகளில் காணப்படும். அவை மஞ்சள் தேமல் நோய், நுனி அழுகல் நோய், மற்றும் கத்தி வெட்டு நிலை நோய் ஆகும். இந்த நோய்கள் கரும்பின் குருத்து பகுதியில் உள்ள சோலைப் பரப்பில் அதிகம் காணப்படும். இதன் காரணமாக சோலை உறை சேரும் இடத்துக்கு சற்று மேல் உள்ள சோலைப் பரப்பு வெளுத்துக் காணப்படும்.

அந்த இடத்தில் சிகப்பு நிறக் கோடுகள் தோன்றி ஒன்று சேர்ந்து புண் போன்ற தோற்றம் ஏற்படும். இதன் காரணமாக சோலை அழுகி வீழ்ந்து விடும். இதே போல் இலையின் அடிப்பாகம் குறுகலாகவும், மஞ்சள் நிறத்துடன் இருக்கும். எனவே கரும்பு பயிர் சோலைகள் இல்லாமல் மொட்டையாக நிற்கும். இளம் பயிரில் குருத்து இலைகள் ஒன்றோடு ஒன்று பிணைத்துக் கொண்டு புதுக் குருத்து வெளிவராமல் தடுத்துவிடும். சில சமயங்களில் வளர்ந்த கரும்பில் குறுக்காக ஏணிப்படிகள் போல் பள்ளங்களும் காணப்படும். இந்த நோயின் பூசன விதைகள் காற்றினால் பரவுகின்றன.

### பூஞ்ஞான கொல்லி

இந்த நோயை கட்டுப்படுத்த நோய் அறிகுறி தென்படும் போது எக்டேருக்கு மேன்கோசெப் 0.3 மில்லி அல்லது கார்பென்டாசிம் 0.1 மில்லி அல்லது 0.2 மில்லி காப்பர் ஆக்ஸி குளோரைடு எடுத்து தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேலும் நோயின் தீவிரத்தை கருத்தில் கொண்டு 3 முறை தொடர்ந்து தெளிக்கலாம்.

இதே போல் நோய் முற்றிய நிலையில் தாக்கப்பட்ட பயிர்களை பிடுங்கி எறிய வேண்டும். பிறகு மேற்கூறிய பூஞ்சாணக் கொல்லியில் ஏதாவது ஒன்றை தெளிக்க வேண்டும்.

மேலும் அந்த இடங்களில் நோய் எதிர்ப்பு திறன் கொண்ட பயிர்களை பயிர் செய்ய வேண்டும். இவ்வாறு மேற்கொண்டால் கரும்பை தாக்கி அழிக்கும் குருத்தழுகல் நோயை கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## விவசாயிகள் நுட்பங்களை கற்க உதவும் வயல்வெளிப்பள்ளி

விவசாயிகளுக்கு பயிர் சாகுபடி உத்திகளை துல்லியமாக விளக்க வயல்வெளிப்பள்ளி என்னும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த திட்டம் படித்த, படிக்காத விவசாயிகளுக்கு ஒரு செயல்முறை பயிற்சியாக இருக்கிறது. இது பற்றி தெரிந்து கொள்ளலாம்.

### வயல்வெளிப்பள்ளி

இந்த வயல்வெளிப்பள்ளிகளை நீண்ட கால பயிற்சி பெற்ற வேளாண்மை துறை அதிகாரிகள் நடத்துகிறார்கள். இதன்படி ஒரு வயல்வெளிப்பள்ளிக்கு 30 விவசாயிகள் தேர்வு செய்யப்படுவார்கள். இவர்களுக்கு வயல்வெளிப் பள்ளியில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு, சாகுபடி தொழில் நுட்பம் விவரங்களை வேளாண் அதிகாரி சில சோதனைகள் மூலம் தெரிந்து கொள்கிறார். பிறகு அவர்களுக்கு தேவையான தகவல்களை அளிக்கும் பயிற்சி வயல்வெளியில் நடக்கிறது.

இதன்படி வயலின் வரப்பில் நின்று சூரிய ஒளி, மேகமூட்டம், காற்றின் வேகம், காற்றடிக்கும் திசை, காற்றின் ஈரப்பதம் மற்றும் வரப்பிலுள்ள எலிவளைகள், இயற்கை எதிரிகள் குறித்த விபரங்களை விவசாயிகள் கண்டறிந்து எழுதுகின்றனர்.

### பயிர் வளர்ச்சி

பிறகு அந்த நிலத்தில் இருக்கும் செடியின் அருகில் சென்று அதன் மேலே பறக்கும் பூச்சிகள் எவை என பார்க்கின்றனர். பின்னர் பயிரின் மேல் வட்டப்பகுதி தொடங்கி தரைமட்டம் வரை உள்ள உயிரினங்களை கணக்கிடுகின்றனர். இதற்கடுத்து பயிரின் வளர்ச்சி மற்றும் பயிர் கூறுகள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இப்படி எடுக்கப்படும் குறிப்புகள் மற்றும் விபரங்களின் அடிப்படையில் இந்த பயிரின் சரியான வளர்ச்சிக்கு என்ன செய்ய வேண்டும், நோய் தாக்குதலை தடுப்பது எப்படி என்று குழு விவாதம் நடத்தி ஒருங்கிணைந்த நிர்வாக முடிவை எடுக்கின்றனர். அதன்படி வயல்வெளிப்பள்ளிகள் விவசாயிகளை சாகுபடியில் ஒரு சிறந்த முடிவுகளை எடுக்க உதவும் திறனை அளிக்கிறது என்பதில் மாற்றமில்லை.

## வேளாண்மை கேள்வி பதில்

**கேள்வி:** நான் நிலக்கடலை பயிரிட விரும்புகிறேன். இதில் ஊடுபயிராக பயிர் செய்தால் லாபம் இருக்குமா?

**உடையப்பன், உடுமலை.**

**பதில்:** கண்டிப்பாக லாபம் உண்டு. மேலும் நிலக்கடலையில் ஊடுபயிர் செய்யும் போது பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்த முடியும். நிலக்கடலையில் ஊடுபயிராக துவரை, காராமணி, ஆமணக்கு, கம்பு போன்ற பயிர்களை பயிரிடலாம். துவரை மற்றும் காராமணியை 6:1 என்ற விகிதத்தில் விதைப்பாக விதைக்கலாம். இவை காற்றில் உள்ள தழைச்சத்தினை நிலத்தில் நிலைப்படுத்தும். ஆமணக்கு பயிரை வரப்பு பயிராகவோ அல்லது கலப்பு பயிராக சாகுபடி செய்யலாம்.

பூச்சிகள் இலைகள் அகலமாக உள்ள துவரை, காராமணி மற்றும் ஆமணக்கு பயிரைத்தான் முதலில் தாக்கும். இவற்றில் உடனடியாக பயிர் பாதுகாப்பு செய்து நிலக்கடலை பயிரை பாதுகாக்கலாம்.

கம்பு பயிரை 4:1 என்ற விகிதத்தில் விதைப்பதன் மூலம் நிலக்கடலையில் சுருள் பூச்சி தாக்குதலை தவிர்க்கலாம்.

**கேள்வி:** எனது நிலத்தில் மாந்தோப்பு உருவாக்க விரும்புகிறேன். இது லாபகரமானதாக இருக்குமா?

**மணியன், தாராபுரம்.**

**பதில்:** இப்போது மாம்பழ சீசன் தொடங்கியிருக்கிறது. சந்தையில் போய் மாங்காய் வடுவின் விலையை கேட்டு பாருங்கள். கால் கிலோ வடு 25 ரூபாய்க்கு விற்கிறார்கள். இரண்டு கை அளவு தான் எடை நிற்கும் இந்த பிஞ்சுகளின் விலையே இவ்வளவு என்றால் ஒரு மாந்தோப்பில் கிடைக்கும் வடு, பழங்களின் விலையை கணக்கிட்டுக் கொள்ளுங்கள். மதுரை வேளாண் கல்லூரியில் மா கன்று ரகம் 30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. 3 ஆண்டுகளில் காய்ப்புக்கு வரும் என்கிறார்கள். விசாரித்து பாருங்கள். நல்ல ரகமாக தேர்வு செய்து நடுங்கள்.

விவசாயிகளே உங்கள் சந்தேகங்கள், கேள்விகளை கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

**ஆசிரியர்,**
**வேளாண்மை செய்தி பிரிவு, தினத்தந்தி, கோவை–18**





ஊட்டி தாவரவியல் பூங்காவில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் புற்களில் வடிவமைக்கப்பட்டுள்ள மாலையிடும் யானைகளை படத்தில் காணலாம்.

**ஊட்டி தாவரவியல் பூங்காவில்**

# சுற்றுலா பயணிகளை கவரும் புல்வெளியில் புதிய அலங்காரம்

ஊட்டி, மார்ச்.17-

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் புதிய அலங்காரங்கள் வடிவமைக்கப்பட்டு உள்ளன.

## கோடை சீசன்

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஏப்ரல், மே மாதங்களில் கோடை சீசன் நிலவும். இந்த குளு, குளு சீசனை அனுபவிக்க பல்வேறு இடங்களில் இருந்து சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார் கள்.

சுற்றுலா பயணிகள் ஊட்டி தாவரவியல் பூங்கா, படகு இல்லம், ரோஜா பூங்கா, தொட்டபெட்டா, பைக்காரா படகு குழாம், பைக்காரா நீர்வீழ்ச்சி, குன்னூர் சிம்ஸ் பூங்கா உள்பட பல்வேறு இடங்களை கண்டு ரசித்து செல்கிறார்கள்.

## மலர் கண்காட்சி

கோடை சீசன் காலத்தில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பல்வேறு விழாக்கள் அரசு துறைகள் சார்பிலும், தனியார் அமைப்புகள் சார்பிலும் நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் நடைபெறும் மலர் கண்காட்சி உலக புகழ் பெற்றது ஆகும்.

மே மாதம் 2 அல்லது 3 வாரத்தில் ஊட்டி தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சி நடத்தப்படுகிறது. கண் காட்சியை லட்சக்கணக் கான சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து செல்கிறார்கள். இந்த ஆண்டு மலர் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகிறது.

## புதிய வடிவங்கள்

பூங்காவில் உள்ள புல்வெளிகள் சமப்படுத் துதல், பனி மற்றும் வெயிலில் இருந்து மலர் செடிகளை பாதுகாத்தல், உரமிடல், வர்ணம் பூசுதல், செடிகளுக்கு தண்ணீர் அடித்தல், நிழற் குடை அமைத்தல் உள்பட பல்வேறு பணிகள் நடந்து வருகிறது. இந்த ஆண்டு மலர் கண்காட் சிக்காக ஆயிரக்கணக்கான தொட்டிகளில் மலர் செடிகள் நடவு செய்யப் பட்டுள்ளது.

மேலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகை யில் பூங்காவில் உள்ள இத்தாலியன் கார்டனில் இருக்கும் மேடான புல்வெளி பகுதியில் புதிய அலங்காரங்கள் செய்யப்பட்டு உள்ளன. முன்பு சீட்டு கட்டு போன்ற வடிவங்கள் செய்யப்பட்டு இருந்தன.

தற்போது அவை மாற்றப்பட்டு, புற்களில் மாலையிடும் யானைகள், குத்துவிளக்குகள், பட்டாம்பூச்சி உள்பட பல் வேறு வடிவங்கள் அமைக்கப் பட்டு உள்ளது. இவைகள் சுற்றுலா பயணிகளை பெரிதும் கவர்ந்து இழுக்கின் றன. மேலும் கோடை சீசன் காலத்தில் வரும் சுற்றுலா பயணிகளை இந்த அலங்கா ரங்கள் நிச்சயம் கவர்ந்து இழுக்கும்.

எப்போதும் இத்தாலியன் கார்டன் மேடான பகுதியில் மட்டும் வடிவமைக்கப்பட்டு இருந்த, இந்த அலங்காரங்கள் தற்போது, அதற்கு மேல் உள்ள கண்ணாடி மாளிகைக்கு செல்லும் வழியிலும் அமைக்கப்பட்டு இருக்கிறது.



புற்களில் வடிவமைக்கப்பட்டுள்ள பட்டாம்பூச்சி மற்றும் குத்துவிளக்கு.